RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s730

# கள்ளிக்காட்டு இதிகாசம் காட்டும் வாழ்வியல்

## க. அலமேலுமங்கை [அ, *]

[அ] தமிழ்த்துறை, அருள்மிகு கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணன் கோயில்-626126, தமிழ்நாடு, இந்தியா.

# Kallikattu Ithikasam Exhibit Humanities

## K. Alamelumangai [a, *]

[a] Department of Tamil, Arulmigu Kalasalingam Arts and Science College, Krishnan Kovil-626126, Tamil Nadu, India

* Corresponding Author:
drkalamelumangai82@gmail.com

Received: 03-12-2021
Revised: 14-04-2022
Accepted: 30-04-2022
Published: 29-07-2022

**ABSTRACT**

The earth is a vast place inhabited by a variety of people. The lifestyles of the people living in each region or locality are different. People's food, worship, beliefs, professions, rituals, speeches, relationships, living conditions, etc., vary in the way of life in each locality. There is no need to visit such people to understand their way of life. Reading news about them we can understand. Thus innovation plays an important role in recording the lives of different people. Novels are generally classified as family novels, social novels, detective novels, and historical novels. Any kind of innovation can be said to be eligible for the award if it can express human thought or the eight types of human truths. One such award-winning novel is "Kallikattu Ithikasaam". The novels written by Padma Bhushan awardee Vairamuthu is the Kallikattu Ithikasaam. Vairamuthu says that the story of this novel had been brewing in his subconscious for many years. Time ordered him to carry this grief on his chest for forty-two years and place it in the coral ceremony of Ananda Vikadan; wrote; We can realize that his name is Vairamuthu from what he himself says in his preface. The word "kallikatu" refers to a village called Kallikatu, a parched forest where reeds grow profusely. So the word Ithikasaam means true story, readers of this novel will understand that this is a true story that happened in the village. The field of innovation "Kallikatu Ithikasaam" is created with the village as the center. In this, the storyteller has made good use of the speech cases, customs, proverbs and professions of the village people. Focusing on these, this article examines how the legend of Kallikatu Ithikasaam reveals the life of the people.

**Keywords:** Kallikatu Ithikasaam, Vairamuthu, Ananda Vikadan, Lifestyle

## முன்னுரை

தமிழ்நாடு, தேனி மாவட்டம், பெரியகுளம் அருகில் உள்ள வடுகபட்டியில் ராமசாமித்தேவர் - அங்கம்மாள் ஆகியோருக்கு மகனாக விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் வைரமுத்து அவர்கள். சிறந்த புகழ் பெற்ற தமிழ்த் திரைப்பட பாடலாசிரியர் மற்றும் கவிஞர் ஆவார். இவர் சிறந்த பாடலாசிரியருக்கான இந்திய அரசின் விருதை 7 முறையும், கலைமாமணி விருது(1990), சாகித்ய அகாதெமி விருது(2003), பத்மபூஷன் விருது(2014) எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

வைகை அணை கட்டப்பட்டபோது அதில் நீர்தேங்கும் பரப்புக்காகக் காலி செய்யப்பட்ட 14 கிராமங்களின் பூர்வக் கதைதான் கள்ளிக்காட்டு இதிகாசம். மண் சார்ந்த மக்கள் மண்ணோடும்

வாழ்வோடும் நடத்திய போராட்டங்களை வலியோடு கூறிய படைப்பு எனலாம். இப்புதினம் 2003 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்றது.

மக்களின் வாழ்வில் நீர் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. வள்ளுவப் பெருந்தகை "நீரின்றி அமையாது உலகு" என்கிறார் (Parimelalhagar, 2001). முன்பு கிணறுகள் பல இருந்தன. இன்றோ கிணறுகளே இல்லை என்ற நிலை உருவாகி உள்ளது. கோவில்களிலும் சில வீடுகளில் மட்டுமே கிணறுகளை இப்பொழுது காண முடிகின்றது. ஆனால் கிணற்றின் அருமை உணர்ந்து கரிசல் காட்டில் வாழும் மக்கள் கிணறு வெட்ட முற்படுவதை ஆசிரியர் இங்கு பதிவு செய்துள்ளார். "தலையை வெட்டினாலும் கிணறு வெட்டமா விடுவனா? ஊருக்குப் பரம்பரையாகக் கிணறு வெட்டுற குடும்பம் முத்துக்காளி நாயக்கர் குடும்பம். கள்ளிக்காட்டுச் சீமையில இருக்கிற எழுவது எம்பது கெணறுகளும் முத்துக்காளி நாயக்கர் வீட்டாளுகளாச் சேர்ந்து வெட்டி முடிச்சது தான்" (Vairamuthu, 2001).

## உணவு வகைகள்

மனிதன் உயிர்வாழ்வதற்குரிய அடிப்படைத் தேவைகளுள் முக்கியமானதும் முதன்மையானதும் உணவு ஆகும். அதனால்தான் மணிமேகலை காப்பியம் "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்கிறது (Subramanian, 2018). ஆன்றோர்களும் தானத்தில் சிறந்தது "அன்னதானம்" என்பார்கள். அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழும் பகுதிகளுக்கு ஏற்ப தங்கள் பகுதிகளில் விளைந்த சத்தான உணவை உண்டு, நன்கு உழைத்து, தங்களைச் சுற்றி உள்ள மக்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். தற்போது வாழும் இன்றைய காலகட்டத்தில் இது எல்லாம் நினைவில் மட்டுமே வாழும் நிகழ்வுகளாக உள்ளன.

கள்ளிக்காட்டு இதிகாசத்தில் கரிசல் நில மக்களின் உணவாகக் கம்பு, வரகு, சோளம், தினை, நெல் முதலிய தானியங்களும், பாசிப்பயறு, தட்டாம் பயறு போன்ற பயறு வகைகளும் இருந்தது என்பதை இந்நாவலின் மூலம் அறியலாம். இது மட்டுமன்றி "கொத்தமல்லித் தழையும், பச்சை மிளகாயும், இஞ்சியும் கலந்த மோர்" இதனை உணவாகப் பயன்படுத்தி உள்ளனர் என்பதையும் காணமுடிகிறது. மேலும் இப்பகுதியில் வாழும் மக்கள் ஆட்டுக்கறி, பறவைக்கறி, உடும்புக்கறி, பன்றிக்கறி, கோழிக்கறி, எலிக்கறி கூட தின்னும் வழக்கத்தினர் என்பதும் மாட்டுக்கறி மட்டும் சாப்பிடும் வழக்கம் இல்லாதவர் என்பதும் சுட்டப்படுகிறது. ஏனெனில் அது விவசாயத்தில் ஒரு முக்கிய இடம் பெறுவதாலும் இவர்கள் விவசாயத்தை மிகவும் விரும்புவதாலும் அதனை உண்பது இல்லை என்பதனை நாம் காணமுடிகிறது (Vairamuthu, 2001).

## இறை நம்பிக்கை

மனிதன் மண்ணில் வாழ நம்பிக்கையே பிரதானம் எனலாம். நம்பிக்கையற்ற மனிதனால் இப்பூமிதனில் ஒரு நொடி கூட வாழ்தல் இயலாத காரியம் ஆகும். இப்பகுதியில் வாழும் மக்கள் தன் மீதும் இறைவன் மீதும் முழுமையான நம்பிக்கை வைத்திருந்தனர் என்ற செய்தியை அறியமுடிகிறது .

"பேயத்தேவர் கெணத்துல தண்ணி கண்டா கெடா வெட்டி பொங்க வைக்கிறேன்னு சாமிக்கு நேந்துக்கிறார்" (Vairamuthu, 2001).

"பைரவனும் சீலக்காரியும் தான் என் பசுவையும், கனடையும் காப்பாத்தனும்" என்று சொட்டையன் இறைவனிடம் வேண்டுவதைக் காணமுடிகிறது (Vairamuthu, 2001).

## திருமணம்

கரிசல் நிலத்தில் வாழும் மக்களின் திருமணம் மாப்பிள்ளை வீட்டில் நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது (Vairamuthu, 2001).

## விவசாயம் - பயிரிடும் முறை

பயிரிடுவது என்பது எளிதான செயல் அல்ல. அதற்கென்று வகுக்கப்பட்ட முறையைப் பின்பற்றினால்தான் நல்ல விளைச்சலைக் காணமுடியும். நெல், கரும்பு, வாழை, தென்னை என ஒவ்வொன்றையும் பயிரிடும் முறையைக் கள்ளிக்காட்டு இதிகாசம் அழகாக உணர்த்துகிறது.

"நண்டூரநெல்லு

நரியோடக் கரும்பு

வண்டியோட வாழை

தேரோடத் தென்னை" (Vairamuthu, 2001).

## பழமொழிகள்

விவசாயம் நன்றாகச் செழிக்க ஆட்டுப் புழுக்கையும் கோமியமும் சேர்ந்தா பொட்டக்காடும் பொன் விளையும் என்பது கரிசல் காட்டில் வாழும் மக்களின் நம்பிக்கையாக உள்ளது. அதனால்தான் தை மாதம் உழவு செய்தால் அது செழிப்பைத் தரும் என்பதைப் பேயத்தேவர் தன் பேரனுக்குப் பழமொழி வாயிலாக உணர்த்துகிறார்.

"தை ஒழவுஅய்யாட்டுக்கெடைடா"

"நெல்லு சிந்தனா அள்ளலாம்

சொல்லு சிந்தனா அள்ள முடியாது"

"தென வெதைச்சாத்தென அறுக்கணும்

வென வெதைச்சா வென அறுக்கணுமில்ல"

போன்ற பழமொழிகள் மூலம் கரிசல் வட்டார மக்கள் பேசுகின்ற பழமொழிகள்கூட விவசாயத்தைச் சார்ந்தவையாக இருப்பதை நாம் அறியமுடிகிறது (Vairamuthu, 2001).

## வட்டாரச் சொற்கள்

கள்ளிக்காட்டு இதிகாசத்தில் வட்டார வழக்குச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. தமிழ்ச் சொற்களை முறையாக உச்சரிக்காத பொழுது அச்சொற்கள் சிதைவு பெறுகின்றன. இதுதான் நாளடைவில் அச்சொற்கள் வட்டார வழக்குச் சொற்களாக மாறி விடுகின்றன எனலாம்.

"கூழுக்குத் தொட்டுக்கொள்ள எங்கேடா மறுமாத்தம்?" (Vairamuthu, 2001).

"ஒரே வகை உணவுக்கு மாற்றமாகத் தொட்டுக்கொள்வது மறுமாற்றம்" (Vairamuthu, 2001).

"ஆமா இவரு பெரிய சாணவாக்கியரு சூச்சி பண்றாகல்லமில்ல சூச்சி" (Vairamuthu, 2001).

"சின்னு நாலுந்தெரிஞ்ச நரிகுளிப்பாட்டி என்பதனால் உள்ளூர் நடையை வெளியூரில் நடந்தான்" (Vairamuthu, 2001).

"நம்ம கிரகம் சரியில்லப்பா. கம்புக்கூட்ல புல்லு மொளைக்காத பயல்லாம் நம்மளக் களவாணிங்கிறான்" (Vairamuthu, 2001).

இவ்வாறு பல வட்டாரச் சொற்கள் இப்புதினத்தில் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

## கவலை

கள்ளிக்காட்டு இதிகாசத்தில் கதையின் தலைவனாக விளங்குபவர் பேயத்தேவர். இவர் சிறுவயது முதலே இம்மண்ணில் விவசாயம் செய்து வருகிறார். காலமாற்றத்தினால் கடன்

தொல்லையால் கவலையுறுகிறார். கடன் தீர தன் நிலத்தைப் பறிகொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதை நினைத்து

“செக்கச் செவந்த மண்ணு

தின்னு தின்னு பார்த்த மண்ணு

அப்பன் செவத்த மண்ணு

--------------------- --------------இது

இல்லேன்னு போகு முன்னே

என் சுரு போனலென்ன "

"பொன்விளையும் காடு

பூர்வீகப் பெருங்காடு

நல்ல பொலிகாடு

நாளைக்கு என்னதில்ல"

தன் நிலம் தனக்கு இல்லை என்ற நிலை வரும்போது தன் உயிர் போய்விட்டால் என்ன என்று தன் கவலையினை வெளிப்படுத்துகிறார் (Vairamuthu, 2001). பேயத்தேவர் தன்னுடைய மகன் இருமல் நோயினால் வருந்துவதைக் கண்டு கவலையுற்றார். அதனை "உரல் போல இருந்த பயல் உலக்கையாய் இளைத்து விட்டான்" என்கிறார். இவருடைய மனைவி அழகம்மை இறந்தபோது "பறவை ஒன்று பறந்து கொண்டே பாறையில் இட்ட முட்டையாய் நொறுங்கிப் போனார்" என்ற செய்தியையும் அறிந்து கொள்ள முடிகிறது (Vairamuthu, 2001). கள்ளி காட்டில் வாழும் மக்கள் தொழில் மூலமாகவும் தன் குடும்பத்தின் மூலமாகவும் கவலை அடைவதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

## கடின உழைப்பு

மனிதர்கள் அயராத உழைப்பின் மூலம் மிகப்பெரிய வெற்றியையும் புகழையும் பெறமுடியும் என்பதனைப் பேயத்தேவரும் அவரது பேரனும் செய்த செயல் மூலம் கரிசல் வாழ் மக்கள் கடின உழைப்பாளிகள் என்பதனை உணரலாம்.

"மம்பட்டியும் கடைப்பாரையும் அருவாளுமாக மண்ணோட மல்லுக்கட்டி, மேடுகோடு தட்டி நிலஞ்சேக்குறாக தாத்தாவும். பேரனும் ,ஒரு மாசம் - இரண்டு மாசம் - ஆறு மாசம் - ஒரு வருஷம் கல்லுன்னு பாக்காம முள்ளுன்னு பாக்காம சரளைக்காடாக் கெடந்த நெலத்தை ஒப்புரவு பண்ணி, இந்தா இந்தான்னு பத்து ஏக்கரையும் பொன்னு வெளையிற பூமியா மாத்திப்பிட்டாக கெழவுனம் பேரனும்" (Vairamuthu, 2001).

## நன்றி மறவாமை

மனிதனுக்குரிய உயரிய குணங்கள் பலவற்றில் ஒன்று நன்றி மறவாமை .இதனைக் கரிசல்காட்டு மக்களும் மறப்பதில்லை என்பதனை அவர்களுடைய கூற்றின் மூலமாக நாம் அறியமுடிகிறது. வள்ளுவப் பெருமகனும் "நன்றி மறப்பது நன்றன்று" என்று கூறுகின்றார் (Parimelalhagar, 2001). இப்பகுதியில் வாழும் மக்களும் கிணறு வெட்டுவதற்குப் பிறரிடம் உதவி கேட்கும் பொழுது அவர்கள் செய்யும் உதவியைத் தங்களுடைய தலைமுறைகள் யாரும் மறப்பதில்லை என்கிறார்கள்.

ஒங்களுக்குக் கூலி கொடுத்துக் கெணறு வெட்ட எனக்குத் தாட்டியம் பத்தாது. கூக்கொறைய நெனைக்காதீக. இந்தக் கம்பு மூடையை நான் குடுத்த காணிக்கையாக நெனைச்சுக்குங்க. கெணறு வெட்ட ஒங்க தளவாடம் மட்டும் குடுத்து உதவுங்க. ஏழேழு தலமாறைக்கும் ஒங்கள மறக்க மாட்டோம்" (Vairamuthu, 2001).

## அறிவியல் அறிவு

கள்ளிக் காட்டில் வாழ்கின்ற மக்கள் நடைமுறைச் செய்திகளும், அறிவியல் பற்றிய செய்திகளும் தெரிந்து வைத்திருந்தனர் என்பதனை "மதுர ஜில்லா மேப்ப வாங்கியாந்து அங்கிட்டும் இங்கிட்டும் ஒட்டிப்பார்த்ததுல இந்தக் கரட்டுக் காட்டுப் பள்ளத்துலதான் ஆயிரம் அடி நீளத்துக்குப் பாறை இருக்குதுன்னு கண்டுபிடிச்சாகளாம். எந்த அணையும் பூமிக்கு அடியில் இருக்கிற ஒரு பெரும் பாறை மேல தான் நிக்கணுமாம். இல்லாட்டித் தேக்கி வச்ச தண்ணி போறேன் போறேன்னு பூமிக்கு அடியிலயே போயிருமாம்" என்று கூறுவதன் மூலம் அவர்கள் அறிவியல் அறிவை அறிந்து கொண்டவர்களாக இருந்தனர் என்பதை உணரமுடிகிறது (Vairamuthu, 2001).

## ஆய்வுப் பயன்கள்

கள்ளிக்காட்டு இதிகாசம் என்னும் இந்நாவலை ஆய்வு செய்ததன் மூலம் கரிசல்காட்டு மக்கள் நீரின் தேவையை உணர்ந்து, அதற்காக அயராது பாடுபட்டு விவசாயத்தை செழிக்க வைத்தனர் என்பதனையும், நிலம் தன்னை விட்டுப் போகும்போது உயிர் போக்குவதாகக் கருதினார்கள் என்பதனையும், அவருடைய பேச்சு வழக்குகள் எவ்வாறு இருந்தன என்பதனையும், பிறர் செய்யும் உதவி மற்றும் நன்றியை மறவாத தன்மையையும், நடப்பு நிகழ்வுகளைத் தெரிந்திருந்த செய்தியும், அவர்களுடைய கடின உழைப்பையும் நாம் அறிந்துகொள்ள உதவியாக இருந்தது.

## முடிவுரை

இப்புதினமானது படிப்பதற்கு மிகவும் எளிமையானதாகவும், படிப்போரை இக்கதையில் ஆழ்ந்து இழுத்துச் செல்லக் கூடியதாகவும் அமைந்திருப்பதை நாம் உணரமுடியும். தொல்காப்பியர் கூறிய எண்வகை மெய்ப்பாடுகளைப் படிப்போருக்கு ஏற்படுத்தக்கூடியதாக இக்கதையின் போக்கானது அமைந்துள்ளது. இப்புதினத்தில் வரும் பேய்த்தேவர் என்னும் சாதாரண குடிமகன் வாழ்க்கையில் படும் துயரங்களையும், அவனுக்கு ஏற்படும் இன்ப துன்பங்களையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. மேலும் இதில் முழுக்க முழுக்க மக்கள் பேசக்கூடிய பேச்சு வழக்கு, வட்டார வழக்கு சொற்கள், பழமொழிகள், உவமைகள் அவர்கள் படும் துயரங்கள் போன்ற அனைத்தும் அப்பகுதியில் வாழும் மக்களின் கிராமிய பதிவுகளே ஆகும். இவற்றை வைத்தே நாம் இப்புதினமானது இப்பகுதி மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துகிறது என்பதை மேற்கண்ட சான்றுகள் மூலம் நாம் உணர்வுபூர்வமாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## References

Parimelalhagar, (2001) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Subramanian, S.V., (2018) Manimekalai moolamum uraiyum, Manivasagar Pathippagam, Chennai, India.

Vairamuthu, (2001) Kallikattu Ethikasam, Thirumagal Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License